
**அக்டோபர் – 03**

# TNPSC துளிகள்

- ❖ சென்னையின் மிக நீளமான இரண்டு கிலோமீட்டர் நீளமுள்ள J. அன்பழகன் மேம்பாலத்தை தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.
- ❖ பீகார் மாநிலம் பாட்னாவில் மூன்றாவது உன்மேஷா சர்வதேச இலக்கிய விழா நடத்தப் பட்டது.
- ❖ இந்தியக் கடற்படையானது இந்திய இராணுவத்துடன் இணைந்து ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்தில் 'ஜல் பிரஹார் 2025' என்ற கூட்டுப் பயிற்சியை நடத்தியது.
- ❖ சர்வதேச கிரிக்கெட் சபை (ICC) மற்றும் UNICEF ஆகியவை 2025 ஆம் ஆண்டு ICC மகளிர் கிரிக்கெட் உலகக் கோப்பைப் போட்டியின் போது "Promise to Children" என்ற பிரச்சாரத்தைத் தொடங்கின.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## கன்னியாகுமரி நன்னாரி





- ❖ கன்னியாகுமரி நன்னாரியானது புவிசார் குறியீட்டு பெறுவதற்காக முன்மொழியப் பட்டுள்ளது.
- ❖ இது அதன் குளிர்ச்சியூட்டும் பண்புகள் மற்றும் வாய்ப் புண்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான அதன் பாரம்பரியப் பயன்பாட்டிற்காக மதிப்புமிக்க ஒரு மூலிகையாக விளங்கும் நன்னாரிக்குப் பெயர் பெற்றது கன்னியாகுமரி மாவட்டம் ஆகும்.
- ❖ இந்த நன்னாரியின் வேர் ஆனது, வழக்கமான நன்னாரியை விட தடிமனாகவும், நறுமணமாகவும், ஆழ்ந்த நிறத்திலும் உள்ளது, மேலும் இது வெயிலில் உலர்த்தப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, மருத்துவ மற்றும் சமையல் பயன்பாட்டிற்காகப் பதப்படுத்தப் படுகிறது.
- ❖ தென்மேற்குத் தொடர்ச்சி மலைகளின் கனி பழங்குடியினர் பாரம்பரியமாக

நன்னாரியை (ஹெமிடெஸ்மஸ் இண்டிகஸ்) சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் இரத்தச் சுத்திகரிப்பு, உடல் குளிரூட்டி மற்றும் செரிமான உதவிக் காரணியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

# தேசியச் செய்திகள்

## Study in India (SII) வலை தளம்




- இந்தியாவில் படிக்கும் அனைத்து வெளிநாட்டு மாணவர்களும் 2025–26 ஆம் கல்வியாண்டு முதல் Study in India (SII) வலை தளத்தில் பதிவு செய்வதை பல்கலைக்கழக மானியக் குழு (UGC) கட்டாயமாக்கியுள்ளது.
- வெளிநாட்டு மாணவர்களைச் சேர்க்கும் உயர்கல்வி நிறுவனங்கள் (HEI) விதிவிலக்கு எதுவும் இல்லாமல் SII வலை தளத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- வெளிநாட்டு மாணவர்களுக்கான கல்வி படிப்புகளுக்கான நுழைவு இசைவுச் சீட்டுகள் தற்போது UGC அறிவுறுத்தல்களின்படி SII வலை தளத்துடன் நேரடியாக இணைக்கப் படும்.
- இதுவரை, இந்தியாவில் வெளிநாட்டு மாணவர்களுக்கு மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அமைப்பு எதுவும் இல்லை, இதனால் நுழைவு இசைவுச் சீட்டுகளின் செயல்முறை நிலையைக் கண்காணிப்பதிலும், காலாவதியான வழக்குகளிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன.

## இந்தியா-EFTA TEPA ஒப்பந்தம்

- இந்தியா-ஐரோப்பிய தடையற்ற வர்த்தகச் சங்கத்தின் (EFTA) வர்த்தகம் மற்றும் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் (TEPA) ஆனது 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம்

தேதியன்று அமலுக்கு வருகிறது.

- அடுத்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் 100 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான அந்நிய நேரடி முதலீடு (FDI) மற்றும் 1 மில்லியன் நேரடி வேலைவாய்ப்புகளை உருவாக்க TEPA உறுதியளிக்கிறது.
- EFTA ஆனது 100% வேளாண் சாராதப் பொருட்கள் மற்றும் முக்கியப் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை உள்ளடக்கிய இந்தியாவின் 99.6% ஏற்றுமதிகளுக்கான வரிகளை நீக்கும்.
- இந்தியா பிரதானமாக தங்கம், தங்கத்தின் மீதான வரியில் எந்த மாற்றமும் இல்லாமல் 95.3% EFTA ஏற்றுமதிகளுக்கான அதன் 82.7% கட்டண வரிகளைத் தொடங்கியுள்ளது.
- TEPA செவிலியர் சேவை, கணக்கியல் மற்றும் கட்டிடக் கலை போன்ற தொழில்முறைச் சேவைகளில் பரஸ்பர அங்கீகார ஒப்பந்தங்களை (MRAs) எளிதாக்குகிறது.




## இந்தியாவின் பால் துறை நிலை

- உலகின் முன்னணிப் பால் உற்பத்தியாளராக உள்ள இந்தியா, உலகளாவியப் பால் விநியோகத்தில் சுமார் 25 சதவீதப் பங்களிப்பை வழங்குகிறது.
- பால் உற்பத்தியானது கடந்த 10 ஆண்டுகளில் 63.56 சதவீதம் அதிகரித்து, 2023–24 ஆம் ஆண்டில் 146.3 மில்லியன் டன்னிலிருந்து 239.3 மில்லியன் டன்னாக உயர்ந்தது.
- தனிநபர் பால் கிடைக்கும் தன்மையானது 48 சதவீதம் அதிகரித்து, ஒரு நாளைக்கு 471 கிராமாக உயர்ந்துள்ளது, இது உலக சராசரியை விட அதிகமாகும்.
- பால் உற்பத்தித் துறையானது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது என்பதோடு இது 8 கோடிக்கும் அதிகமான விவசாயிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது.
- ஸ்ரீஜா பால் உற்பத்தி அமைப்பு ஆனது, பெண்கள் அதிகாரமளித்தலுக்காக சிகாகோவில் பால் துறைக்கான புதுமை விருதை வென்றது.
- 2024–25 ஆம் ஆண்டில், நாடு முழுவதும் 565.55 லட்சம் செயற்கை கருவூட்டல்கள் (AI) மேற்கொள்ளப்பட்டன.
- இந்தியாவில் 22 பால் கூட்டமைப்புகள், 241 மாவட்டத் தொழிற்சங்கங்கள் மற்றும் 25 பால் உற்பத்தி அமைப்புகள் உள்ளன.
- வெண்மைப் புரட்சி 2.0 ஆனது, 2028–29 ஆம் ஆண்டிற்குள் 75,000 புதியக் கூட்டுறவு

சங்கங்களையும், தற்போதுள்ள 46,422 கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.




# சர்வதேசச் செய்திகள்

## FAO மாநாடு 2025




- இத்தாலியின் ரோமில் உணவு மற்றும் வேளாண் அமைப்பில் (FAO) நிலையான கால்நடை துறை மாற்றம் குறித்த 2வது உலகளாவிய மாநாட்டில் இந்தியா பங்கேற்றது.
- இந்திய நாடானது, கால்நடைகள் தொடர்பான FAO துணைக் குழுவின் முதல் துணைத் தலைமையாகவும், FAO உடனான 80 ஆண்டு காலக் கூட்டாண்மையையும் பேணி வருகிறது.
- கால்நடைத் துறையானது, வேளாண் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலில் (GVA) 31%

மற்றும் தேசியப் பொருளாதாரத்திற்கு 5.5% பங்களிக்கிறது.

- இந்தியாவின் கால்நடைத் துறையானது சமீபத்திய ஆண்டுகளில் 12.77% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தை (CAGR) பதிவு செய்துள்ளது.
- பாரத் பசுதான் (தேசிய டிஜிட்டல் கால்நடை திட்டம்) திட்டத்தில் 353 மில்லியன் விலங்குகளையும் 94 மில்லியன் கால்நடை உரிமையாளர்களும் பதிவு செய்யப் பட்டு உள்ளது.
- இந்தியாவில் பால் பண்ணைத் தொழிலாளர்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் பெண்கள் ஆவர் என்பதோடு இது கூட்டுறவு மாதிரிகளால் செயல்படுத்தப்படுகிறது.

## காசா அமைதித் திட்டம்




- டொனால்ட் டிரம்ப் 20 அம்சத் திட்டத்தினை வெளியிட்டு, உடனடிப் போர்நிறுத்தம் மற்றும் அனைத்து பணயக் கைதிகளையும் 72 மணி நேரத்திற்குள் திருப்பி அனுப்புவதற்கான அழைப்பினை விடுத்தார்.
- இந்தத் திட்டத்தில், இஸ்ரேலியப் படைகளைத் திரும்பப் பெறுதல், நிராயுதபாணியான ஹமாஸ் உறுப்பினர்களுக்குப் பொது மன்னிப்பு மற்றும் காசா நிர்வாகத்தை ஒரு தொழில் நுட்ப ஆட்சிக் குழுவிடம் மாற்றுதல் ஆகியவை அடங்கும்.
- டிரம்ப் தலைமையிலான சர்வதேச "அமைதி வாரியத்தினால்" மேற்பார்வையிடப்படும் ஓர் இடைக்கால நிர்வாகக் குழு காசாவை நிர்வகிக்கும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## IBR எதிரான தடுப்பூசி


- தொற்றுமிக்க மாட்டின ரைனோட்ராச்சீடிஸ் (IBR) தொற்றுக்கு எதிரான உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் கிளைகோபுரோட்டீன் E (gE) நீக்கப்பட்ட DIVA மார்க்கர் தடுப்பூசி சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ரக்சா-IBR என பெயரிடப்பட்ட இந்தத் தடுப்பூசியானது, மலட்டுத்தன்மை, கருக் கலைப்பு மற்றும் இந்த நோயுடன் தொடர்புடைய பால் உற்பத்திக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும்.
- IBR ஆனது இந்தியாவில் பரவலாக காணப்படுகின்ற, மாட்டின ஹெர்பெஸ் வைரசினால் (BHV-1) ஏற்படுகிறது.
- தூசிப் படலப் பாதை வழியாகப் பரவுகின்ற இந்த நோய் ஆனது இனப்பெருக்க

அமைப்புகளை பாதிக்கிறது.

- இது காளைகளிலிருந்து கறவை விலங்குகளுக்கு விந்து மூலமாகவும் பரவுகிறது.
- கருவுறாமை, கருக்கலைப்பு மற்றும் குறைந்த பால் உற்பத்தி ஆகியவை இந்த நோயின் முக்கியத் தாக்கங்களில் சிலவாகும்.
- இந்தத் தொற்றிற்கு இந்தியாவில் தடுப்பூசி எதுவும் கிடைக்கவில்லை என்பதோடு இந்த நோய்க்கு எதிராக இது வரை குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் இல்லை.




## பூமியின் முதல் ரேடார் படங்கள்




- NISAR செயற்கைக்கோள் ஆனது நாசா மற்றும் இஸ்ரோவின் கூட்டினால் இந்தியாவின் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.
- ஆகஸ்ட் மாதத்தில் எடுக்கப்பட்ட முதல் ரேடார் படங்கள் மைனேயின் மவுண்ட் டெசர்ட் தீவு மற்றும் வடக்கு டகோட்டாவில் உள்ள வேளாண் நிலங்களைக் காட்டுகின்றன.
- நாசாவின் L-கற்றை ரேடார் ஆனது காடுகள், கட்டிடங்கள் மற்றும் பயிர் வயல்களைக் கண்டறிந்தது; இஸ்ரோவின் S-கற்றை ரேடார் தாவரங்களைக் கண்காணிக்கும்.
- இந்தச் செயற்கைக்கோள் செப்டம்பர் மாதத்தில் அதன் 464 மைல் சுற்றுப்பாதையை அடைந்தது மற்றும் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அதன் முழு அறிவியல்

செயல்பாடுகளைத் தொடங்கும்.


## ஆளில்லா விமானத்தில் பொருத்தப்பட்ட ரேடார் அமைப்புகள்




- எல்லைப் பாதுகாப்புப் படை (BSF) ஆனது, எல்லைக் கண்காணிப்புக்காக இஸ்ரோவுடன் இணைந்து ரேடார் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானங்களை உருவாக்கி வருகிறது.
- இந்த ஆளில்லா விமானங்கள் சர்வதேச எல்லையைக் கடக்காமல் இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்கு எல்லைகளைக் கண்காணிக்கும்.
- மத்தியப் பிரதேசத்தில் அமைந்துள்ள அதன் தேகான்பூர் அகாடமியில் BSF இந்த ஆளில்லா விமானங்களைத் தயாரிக்கும்.
- ரேடார் பொருத்தப்பட்ட ஆளில்லா விமானங்களானது எல்லைப் பகுதியில் ஊடுருவும் நபர்கள், சிறிய வாகனங்கள் அல்லது கடத்தல் முயற்சிகளின் செயல்பாடுகளை நிகழ் நேரத்தில் கண்டறிய உதவும்.

## சைஃபோன் உப்பு நீக்கம்

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்தின் (IISc) அறிவியலாளர்கள் துணியிழையிலான திரிகள் மற்றும் உலோக மேற்பரப்புகளைப் பயன்படுத்தி சைஃபோன் அடிப்படையிலான வெப்ப உப்பு நீக்க முறையை உருவாக்கினர்.
- இந்த அமைப்பு ஆனது உப்பு நீரைத் தொடர்ந்து சுத்திகரிப்பதன் மூலம், வழக்கமான சூரியச் சுத்திகரிப்பு முறைகளில் காணப்படும் முக்கிய சிக்கலான உப்புப் படிமங்கள் குவிவதைத் தவிர்க்கிறது.
- இந்த அமைப்பு ஆனது சூரிய அல்லது அதிக வெப்பத்தை மட்டுமே பயன்படுத்தி நீர் வெளியீட்டை அதிகரித்து, பல நிலைகளில் வெப்பத்தை மறுசுழற்சி செய்கிறது.
- அலுமினியம் மற்றும் துணி போன்ற குறைந்த விலை பொருட்களிலிருந்து தயாரிக்கப் படும் இது, அதிக உப்புத் தன்மை நிறைந்த நீரை (20% உப்பு வரை) சுத்திகரிக்கிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## புதிய காபி தாவர இனங்கள்





- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் ஒரு புதிய காபி தாவர இனம் கண்டறியப்பட்டுள்ளது.
- ஓபியோரிசா எக்கினாட்டா என்ற இந்த இனமானது மேற்குத் தொடர்ச்சி மலைகளில் இதற்கு முன்னர் காணப்படாத இனமாகும்.
- இது இடுக்கியில் உள்ள தேவிகுளத்தில் உள்ள பல்லுயிர் பெருக்கம் நிறைந்த சோலைக் காடுகளில் கண்டறியப்பட்டது.
- இது ரூபியாசியே குடும்பத்தைச் சேர்ந்தது மற்றும் ஓபியோரிசா முங்கோஸ் பேரினத்துடன் நெருங்கிய தொடர்புடையது.
- இங்கு 100க்கும் மேற்பட்ட காபி செடி இனங்கள் உள்ளன என்ற நிலையில் அவற்றில் 10க்கும் மேற்பட்ட இனங்கள் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் காணப்படுகின்றன.

## செம்மரங்கள் வளங்காப்பு

- தேசியப் பல்லுயிர்ப் பெருக்க ஆணையம் (NBA) ஆனது செம்மரங்கள் (தெரோகார்பஸ் சந்தலினஸ்) வளங்காப்பிற்காக ஆந்திரப் பிரதேச பல்லுயிர்ப் பெருக்க வாரியத்திற்கு 82 லட்சம் ரூபாய் நிதியை அனுமதித்துள்ளது.
- இந்த நிதியானது 1 லட்சம் செம்மரக் கன்றுகளை வளர்க்கப் பயன்படுத்தப்படும்

என்பதோடு இவை காடுகளுக்கு வெளியே உள்ள மரங்கள் (ToF) வளங்காப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

- செம்மரங்கள் தென் கிழக்குத் தொடர்ச்சி மலைகளில், குறிப்பாக அனந்தபூர், சித்தூர், கடப்பா மற்றும் கர்னூலில் மட்டுமே காணப்படும் இனமாகும்.
- இது CITES உடன்படிக்கையின் இரண்டாம் பின்னிணைப்பின் கீழ் மற்றும் 1972 ஆம் ஆண்டு வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது.



THE COST AND THE CRIME

PRECIOUS COMMODITY

- Red Sanders – Pterocarpus santalinus – is a tree species native to Andhra Pradesh's Chittoor, Kadapa, Kurnool, Nellore & Prakasam districts
- The tree is on the endangered species list. Extraction of live trees is prohibited
- The brick red wood has immense value in countries like Japan, China and Myanmar where it is also used to make expensive furniture and musical instruments
- Smuggled wood in sent by land route through the Northeast states to Myanmar and by sea route to Singapore and Dubai
- In a recent auction, one tonne of A-grade logs were sold for ₹1.9 crore. Most of the wood is of B-and C-grades, valued at ₹55 lakh and ₹25 lakh, respectively
- In November 2014, AP earned ₹900 crore by auctioning 2,600 tonne of seized wood
- Bidders from China, Hong Kong, Singapore & Japan took part. Yoga guru Ramdev's Patanjali Yogpeeth also bought the wood, for 'medicinal purposes'
- Second batch auctioning of 3,500 tonne planned for June 17.

WELL-OILED NETWORK

- The smuggling racket operates from forest villages to international markets
- An order placed from abroad is communicated though middlemen to the local operator, who then calls the foreman who supplies the wood-cutters from TN
- Labourers are brought in trains or buses and, in the dark of the night, walk long distances to the heart of the forests where the trees are found
- Lower level forest officials guide them to the right patches
- The logs are chipped, cured and then loaded onto vehicles, concealed in rice husk, watermelons, oil tankers and even ambulances
- Red sanders smuggling involves various independent gangs. Often, it's the turf war that leads to a leak in information and the busting of a network.


# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 2023

- தேசியக் குற்றப் பதிவுகள் வாரியமானது (NCRB) 2023 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 1,77,335 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் 1,62,449 ஆக பதிவானதை விட 9.2% அதிகரிப்பைக் குறிக்கிறது.
- குழந்தைகளுக்கு எதிரான தேசிய அளவிலான குற்ற விகிதம் ஆனது 2023 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 39.9 ஆக அதிகரித்துள்ளது என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் 36.6 ஆக இருந்தது.
- கடத்தல் குற்றங்கள் ஆனது இந்த வழக்குகளில் 45% (79,884) பங்கினைக் கொண்டு உள்ளன.
- பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) சட்டத்தின் கீழான குற்றங்கள் 38.2% (67,694) ஆகும்.
- மத்தியப் பிரதேசம் (22,393 வழக்குகள்), மகாராஷ்டிரா (22,390), மற்றும் உத்தரப் பிரதேசம் (18,852) ஆகியவற்றில் அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் பதிவாகின.
- அசாமில் ஒரு லட்சம் குழந்தைகளுக்கு 84.2 என்ற விகிதத்தில் அதிகபட்ச விகிதம் பதிவாகியுள்ளது.
- டெல்லியில் 140.3 என்ற அதிக குற்ற விகிதத்துடன் 7,769 வழக்குகள் பதிவாகியுள்ளன, அதே நேரத்தில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் ஒரு லட்சத்துக்கு 143.4 என்ற

அதிகபட்ச விகிதம் பதிவாகியுள்ளது.


- ஒட்டு மொத்தத் தேசியக் குற்றப் பத்திரிக்கை விகிதம் 64.3% ஆக இருந்தது என்ற நிலையில் இதில் தமிழ்நாடு (93.7%) மற்றும் ஆந்திரப் பிரதேசம் (91.3%) முன்னணியில் உள்ளன என்பதோடு மேலும் டெல்லி (31.7%) மற்றும் ஹரியானா (39.6%) ஆகியவற்றில் குறைந்த எண்ணிக்கையானது பதிவாகியுள்ளது.




## இந்தியச் சிறைச்சாலைகளின் புள்ளி விவரங்கள் (PSI) 2023 அறிக்கை

- தேசியக் குற்றப் பதிவுகள் வாரியமானது (NCRB) 2023 ஆம் ஆண்டிற்கான இந்தியச் சிறைச் சாலைகளின் புள்ளி விவரங்கள் அறிக்கையினை வெளியிட்டது.
- 2022 ஆம் ஆண்டில் 5,73,220 ஆக இருந்த இந்தியாவின் சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டில் 5,30,333 ஆகக் குறைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.
- இதில் சரிவு இருந்த போதிலும், தேசிய சராசரிச் சிறைச்சாலை ஆக்கிரமிப்பு விகிதம் 120.8% ஆக அதிகமாகவே இருந்தது.
- டெல்லியில் அதிகபட்சமாக 200% ஆகவும், தெலுங்கானாவில் மிகக் குறைவாக 72.8% ஆகவும் பதிவாகியுள்ளது.
- 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத நிலவரப்படி, மொத்த கைதிகளில் 73.5% விசாரணைக் கைதிகள் (3.84 லட்சம்) எண்ணிக்கையுடன் இந்தியாவில் 1,332 சிறைகளில் 5.3 லட்சம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.
- உத்தரப் பிரதேசத்தில் அதிக விசாரணைக் கைதிகள் (சுமார் 73,000) சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.
- அதைத் தொடர்ந்து பீகார் (46,000+) மற்றும் மகாராஷ்டிரா (32,000+) ஆகியவை உள்ளன என்பதோடு பெரும்பாலோனோர் மாவட்ட மற்றும் மத்தியச் சிறைகளில் அடைக்கப் பட்டுள்ளனர்.
- டெல்லியின் 10,026 சிறைகளில் 20,077 கைதிகள் அடைக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் உத்தரப் பிரதேச சிறைகளில் அதன் 65,866 கைதிகள் அடைக்கப் படுவதற்கான திறனைத் தாண்டி, 98,849 கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.
- இங்கு சிறைகளில் மொத்தம் 1,972 மரணங்கள் பதிவாகியுள்ளன என்பதில் அவற்றுள் 1,787 இயற்கை மற்றும் 150 இயற்கைக்கு மாறானவை.

- இங்கு தற்கொலைகள் மூலமாக முக்கியமாக தூக்கிட்டுக் கொள்ளுதல் மூலமானவை 96 இறப்புகளுக்குக் காரணமாக அமைந்தன.
- பஞ்சாபில் இயற்கைக்கு மாறான மரணங்கள் அதிக அளவில் பதிவாகியுள்ளன.
- 2023 ஆம் ஆண்டில் 145 பேர் மரண தண்டனை பெற்றதுடன், உத்தரப் பிரதேசத்தில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் அதிகமாகும்.




# மாநிலச் செய்திகள்

## பதுக்கம்மா திருவிழா 2025



- முதன்மையாகப் பெண்களால் கொண்டாடப்படும் மலர்த் திருவிழாவான பதுக்கம்மா, தெலுங்கானாவின் அதிகாரப்பூர்வ மாநில விழாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- இது துர்கை நவராத்திரியின் போது ஒன்பது நாட்கள் கொண்டாடப் படுகிறது என்பதோடு இது பத்ரபாத அமாவாசை (மஹாளய அமாவாசை) அன்று தொடங்கி

செப்டம்பர்-அக்டோபர் மாத காலக் கட்டத்தில் வரும் சதுல பதுக்கம்மா (அஷ்வயுஜ அஷ்டமி) அன்று முடிவடைகிறது.

- இந்தத் திருவிழா போதெம்மாவை (பருவமழையின் முடிவைக் குறிக்கும்) தொடர்ந்து வருகிறது என்பதோடு இது ஷரத் ருதுவின் (இலையுதிர் காலம்) தொடக்கத்தைக் குறிப்பதால் பருவகால மாற்றத்தைப் பாரம்பரியச் சடங்குகளுடன் சேர்க்கிறது.

# முக்கிய தினங்கள்

## உலக காது கேளாதோர் தினம் 2025 - செப்டம்பர் 28

- காது கேளாதோரின் சாதனைகள் மற்றும் உரிமைகளைக் குறிக்கும் வகையில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பினால் 1958 ஆம் ஆண்டில் உலக காது கேளாதோர் தினம் முதன்முதலில் கொண்டாடப்பட்டது.
- சர்வதேச காது கேளாதோர் வாரத்துடன் இணைந்து செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையன்று இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Set the basis for the future: together we can innovate, inspire and impact!" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★